மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முடிவுகளின் நகல்* பேரவையில் வைக்கப்படுகிறது.

காவிரிப்பூம்பட்டினம்

*243 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டம் காவிரிப்பூம்பட்டினத்தை யாத்ரீகர் ஸ்தலமாக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இத்தகைய உத்தேசம் எதுவும் தற்போது சுற்றுலாத் துறையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இன்றைய தமிழக அரசு பண்டையக் காவிரிப்பூம்பட்டினத்துச் சிறப்புகளை நினைவுபடுத்துகின்ற வகையில் பல நல்ல காரியங்களை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக்காட்டி அதையொட்டி அந்த இடத்தை யாத்ரிகர் ஸ்தலமாக ஆக்க அரசு முனவருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான், அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லையென்று சொன்னேன். அதனல் பிறகு எடுத்துக்கொள்ளப்படலாம்.

Soil Testing Laboratory at Salem

*244 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state

(a) Whether the Government has decided to set up a soil testing laboratory at Salem this year; and

(b) What will be its work and activities?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இது அரசின் ஆலோசனையில் உள்ளது.

(இ) மண்வளச் சோதனை ஆய்வுக் கூடம் அமைக்கப்படின், அதன் அலுவல்கள் வருமாறு —

(1) உழவர்களின் நிலங்கள் எந்த அளவுக்கு வளம் செறிந்தது என்பதைக் கண்டறிதல்.

(2) அதிகமான விளைச்சலைப் பெறும் நோக்கத்துடன் மிகச் சிக்கனமான முறையில் வேண்டிய அளவுக்குக் கூடுதலான உரங்களைப் பயன்படுத்துதல்.

(3) மண்ணில் அமில காரணம் போன்ற தீங்கு பயக்கக் கூடிய தன்மை உள்ளனவா எனக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கான தகுந்த வழிகளைக் கூறுதல்.

(4) கிராம அளவில் நிலவள தரைப்படம் வரைதல்.

---

* 172–174-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 செப்டம்பர் 12]

இந்த ஆய்வுக் கூடம் சேலம் தர்மபுரி மாவட்டங்களின் தேவை களை நிறைவு செய்யும்.

THIRU K. VINAYAKAM : How many acres of land will be benefited by this soil testing laboratory and what is the financial aspect of this laboratory work?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது போன்ற ஒரு ஆய்வுக்கூடம் மாத்திரம் அமைக்கவேண்டுமானல் 60 ஆயிரம் ரூபாய் செலவாகும். குறிப்பாக சேலத்திலே அமைக்கப் படுவதற்கு அவ்வளவு ஆகும் என்ற குறிப்புகள்தான் இங்கே இருக் கின்றன. பொதுவாக எத்தனை ஏக்கர் நிலத்திலிருந்து இந்தப் பரிசோதனை செய்யமுடியும் என்று சொல்லமுடியாது. ஆங்கங்கே உள்ள விவசாயிகளின் அக்கறையைப் பொறுத்து இருக்கிறது. உதாரணமாக, ஆடுதுறையை எடுத்துக் கொண்டால், அங்கே இருக் கின்ற பரிசோதனைக் கூடத்திலே ஒரு மாதத்திற்கு 1,250 சாம்பிள்ஸ் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன. அதுமாதிரி 4,000 சாம்பிள்கள் செய்வதற்கு ஆடுதுறையில் வாய்ப்பு இருக்கிறது. எத்தனை ஏக்கர் என்று சொல்லமுடியாது. பொதுவாக விவசாயி கள் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்களோ, அதைப்பொறுத்துத் தான் சொல்லமுடியும்.

திரு. எம். சுரேந்திரன் : இந்த ஆய்வுக் கூடம் அமைப்பது சேலம் ஜில்லாவிலே எந்த இடத்திலே, என்ன மாதிரியான தகுதி யுள்ள இடத்திலே அமைக்கப்படும் என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சேலம் ஜில்லாவில் என்று தான் இருக்கிறது. எந்த இடம் என்ற குறிப்பு இல்லை.

வெக்கை நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகள்

* 245 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், கம்பம் வட்டாரத்தில் சுமார் 12,000 கால்நடைகளுக்கு ‘ வெக்கை ’ நோய் பரவியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதைத் தடுப்பதற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

Co-operative Sheep Credit Societies

* 246 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) Whether there is any proposal to introduce Co-operative Sheep Credit Societies in Dharmapuri district; and

(b) if so, when they will be started?